

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 01-10-2024


# கட்சிகள் போற்றிய கழகம்

பவள விழா காணும் திராவிட முன்னேற்றக் கழகத்தினை தமிழ்நாட்டுக் கட்சிகள் அனைத்தும் போற்றிப் பாராட்டி இருப்பதுதான் கழகத்துக்குக் கிடைத்த பெருமையாகும். அக்கட்சிகளுக்கு இருக்கும் பெருந்தன்மை ஆகும்.

**1967 ஆம் ஆண்டு தேர்தலில் ஆட்சியைப் பிடித்தார் பேரறிஞர் அண்ணா. அப்போது அன்றைய காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரான வாக்குகளை ஒருமுகப் படுத்துவதற்காக ஒரு கூட்டணியை உருவாக்கினார். “கரும்புச் சாறுக்காக சக்கையைப் பிழிபவர், நான்கைந்து முறை பிழிவார். ஒரு சொட்டு கூட அதில் தேங்கிவிடக் கூடாது என்று பிழிவார். அந்த மாதிரி முடிந்த வரை அனைவரையும் ஒன்று சேர்த்து விட்டேன். இதன்பிறகு ஒன்றிரண்டு சொட்டுக்கள் கரும்புச் சாறு அதனுள் இருக்கலாம். அதனை ஈக்களுக்காக விட்டுவிட்டேன்” என்று சொன்னார். அந்தளவுக்கு ஒன்றுபட்ட சிந்தனை கொண்ட அனைவரையும் ஒன்றிணைத்தார் பேரறிஞர் அண்ணா. அது அன்றைய தினம் மாபெரும் ஆட்சி மாற்றத்தை உருவாக்கியது. அப்படித்தான் தலைவர் கலைஞர் அவர்களும் கூட்டணிகளை உருவாக்கினார். அது தேர்தல் கால கூட்டணிகளாக இல்லாமல், கொள்கைக் கூட்டணிகளாக அமைந்திருந்தது. அதே வழியில் இன்றைய முதலமைச்சர் அவர்களும், தி.மு.க. கூட்டணியை கொள்கைக் கூட்டணியாக வழிநடத்தி வருகிறார் என்பதற்கு எடுத்துக் காட்டுதான் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தி.மு.க. பவள விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு 20 கட்சிகள், தி.மு.க.வை போற்றிய காட்சி ஆகும்.**

இந்த நாட்டில் எத்தனையோ கூட்டணிகள் இருக்கின்றன. அது தோன்றிய வேகத்தில் மறைந்தது. சில கூட்டணிகள் தோன்றவே தோன்றாது. மறைவாகவே இருக்கும். வெளியில் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு திருட்டுக் கூட்டணியாகவே தொடர்வார்கள். இவர்களுக்கு தேள் கொட்டினால், அவர்களுக்கு வலிக்கும். அப்படி இல்லாமல் வெளிப்படையாக – உண்மையாக – ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும் – தட்டிக் கொடுத்தும் இயங்கும் கூட்டணியாக தி.மு.க. கூட்டணி செயல்பட்டு வருகிறது.

2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னால் இந்த மாபெரும் கூட்டணியை தி.மு.க. தலைவர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கினார்கள். இன்று வரை அதே அன்புடன் தொடர்கிறது. இடைப்பட்ட காலத்தில் நடந்த தேர்தல்கள் அனைத்திலும் இக்கூட்டணி மாபெரும் வெற்றியைப் பெற்றது. அதைவிட முக்கியமாக, இந்த வெற்றி ஃபார்முலாவை இந்திய நாட்டுக்கு வழங்கியதும் இந்தக் கூட்டணிதான்.

**“மாநில ரீதியாக உங்களுக்குள் வேறுபாடுகள் இருந்தாலும், அகில இந்திய அளவில் பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற ஒற்றை இலக்கோடு ஒன்று சேருங்கள். அதே நேரத்தில் தொகுதிப் பங்கீடுகளை மாநில ரீதியாகவே முடித்துக் கொள்ளுங்கள்” என்ற வெற்றிச் சூத்திரத்தை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் தயாரித்துக் கொடுத்தார். தனக்கு எதிரிகளே இல்லை என்ற மிதப்பில் இருந்த பா.ஜ.க.வை மைனாரிட்டி எண்ணிக்கைக்கு ‘இந்தியா கூட்டணி’ இறக்கியதற்கு இதுவே அடித்தளம் ஆகும்.**

அதனால்தான் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து பாராட்டும் இயக்கமாக தி.மு.க. உயர்ந்து நிற்கிறது. தலைவரின் கன்னத்தை தடவி வாழ்த்துத் தெரிவித்தார் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் அவர்கள். **‘அவசர நிலைக் காலத்தில் தளபதி ஸ்டாலின் தாக்கப்பட்டபோது தடுத்த கரம் இது. அந்தக் கரத்தால் அவரது கன்னம் தொட்டு வாழ்த்தினேன்’** என்ற சொல்லுக்குள் அரைநூற்றாண்டு வரலாறு அடங்கி இருக்கிறது. **‘இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலக் கட்சிகளிலும் உயர்ந்ததாக இருக்கும் தி.மு.க., நூற்றாண்டு விழா காணும் போதும் ஆட்சியில் இருக்கும்’** என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் செல்வப்பெருந்தகை குறிப்பிட்டார்.

**“தலைவர் கலைஞரை கோபாலபுரம் இல்லத்தில் பார்த்தபோது, ‘உங்களுக்கு எப்படி மெய்க்காப்பாளனாக இருந்தேனோ, அதேபோல தளபதி ஸ்டாலினுக்கும் இருப்பேன்’ என்று சொன்னேன். அதைப் போலவே இனி வரும் காலங்களிலும் அவர் கரத்தைப் பற்றியே இருப்பேன்”** என்று உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னார் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ. **‘இந்தியாவில் மதச்சார்பற்ற சக்திகள் வெல்லுவதற்கான வலிமையை உருவாக்கித் தரும் இயக்கம் தி.மு.க.’** என்று அடையாளப்படுத்தினார் மார்க்சிஸ்ட் செயலாளர் பாலகிருஷ்ணன். **‘தொகுதிகள், இடங்கள் பற்றி கவலைப் படாமல் கொள்கை அடிப்படையில் உருவாவதே கூட்டணி. பாசிசத்தை தி.மு.க. உறுதியாக எதிர்ப்பதால் தான் இக்கூட்டணி தொய்வின்றித் தொடர்கிறது’** என்றார் இந்தியக் கம்யூனிஸ்ட் செயலாளர் முத்தரசன்.

**“தலைவர் கலைஞர் கூட தனது ஆட்சியை திராவிட மாடல் ஆட்சி என்று அறிவிக்கவில்லை. தளபதி மு.க.ஸ்டாலின்தான் அறிவித்துள்ளார். அவர் கலைஞரின் குடும்ப வாரிசு அல்ல. கொள்கை வாரிசு. கருத்தியல் வாரிசு. அண்ணா இன்று இருந்திருந்தால் தட்டிக் கொடுத்திருப்பார். கலைஞர் இருந்திருந்தால் முத்தம் கொடுத்திருப்பார்”** என்று குறிப்பிட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், **“தி.க.வும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் என்பதைப் போல மூன்றாவது குழலாக விடுதலைச் சிறுத்தைகள் இணைந்து செயல்படும்”** என்று முழங்கினார்.

**“திராவிட மாடல் ஆட்சிதான் இந்தியாவையே வெல்லும் ஆட்சி முறையாகும்”** என்பதை உறுதிபடக் கூறினார் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் மொய்தீன். **‘எனது அருமை நண்பர் மு.க.ஸ்டாலின் கைகளில் தி.மு.க. மென்மேலும் மெருகு கூடி, இந்திய நாடெங்கும் திராவிடச் சிந்தனைகள் பொழிகின்றன. இந்தக் கோட்டைச் சுவரில் எங்கேனும் ஒரு கீறல் விழாதா என எதிரிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பாவம் அவர்களது பகல் கனவு பலிக்கப் போவதில்லை’** என்று வாழ்த்துக் கடிதம் அனுப்பி வைத்திருந்தார் மக்கள் நீதி மையத்தின் தலைவர் கமல்ஹாசன்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் பேச்சு உணர்ச்சியமயாக அமைந்திருந்தது. பேராசிரியர் ஜவாஹிருல்லா, ஈஸ்வரன், பொன்.குமார், எர்ணாவூர் நாராயணன், முருகவேல்ராஜன், தமீமுன் அன்சாரி, கருணாஸ், அதியமான், திருப்பூர் அல்தாப், அம்மாவாசி – என அனைத்துத் தலைவர்களும் **தி.மு.க.வைப் பற்றியும், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறித்தும் பேசியவை வானத்தில் இருந்து பொழியும் வாழ்த்து மழையாக அமைந்திருந்தன.**

**‘தோள் கொடுப்பான் தோழன்’ என்பதைப் போல பல்வேறு கட்சிகளின் பாராட்டைப் பெறும் அளவுக்கு பவள விழாக் காலத்தில் உயர்ந்து நிற்கிறது கழகம்!**

இனப் பகைவர்களும் – அவர்களுக்குத் துணைபோகும் வீணர்களும் உண்டாக்கும்

# திசை திருப்பல்களுக்கு நேரம் கொடுக்கக் கூடாது!

## கழகத் தகவல் தொழில் நுட்ப அணியின் ‘திராவிட மாதம்’ கொண்டாட்டத்தில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, அக்.1–**

**கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செப்டம்பர் மாதத்தைத் திராவிட மாதமாகக் கொண்டாடி வருகிறது. திராவிட மாதத்தின் நிறைவுநாளான நேற்று (30-09-2024) கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தகவல் தொழில்நுட்ப அணியின் யூடியூப் பக்கத்தில் சிறப்புரையாற்றினார்.**

**அப்போது முதல்வர் அவர்கள் “இனப் பகைவர்களும் – அவர்களுக்குத் துணைபோகும் வீணர்களும் உண்டாக்கும் திசைதிருப்பல்களுக்கு நேரம் கொடுக்கக் கூடாது!” என்று குறிப்பிட்டார்.**

**முதல்வர் அவர்கள் உரை வருமாறு :–**

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தை திராவிட மாதமாக நாம் கொண்டாடி வருகிறோம். நம்முடைய வரலாறு, சாதனைகள், பல்வேறு அரசியல் விவகாரங்களில் திராவிடப் பார்வை என்று, கழக முன்னோடிகள், பேச்சாளர்கள், தோழமை இயக்கங்களைச் சார்ந்த தலைவர்கள், திராவிட இயக்கப் பற்றாளர்கள் எனப் பலரையும் “திராவிட மாதம்” நிகழ்ச்சியில் பேச வைத்து, பயனுள்ள – கருத்துள்ள முன்னெடுப்பை நம்முடைய ஐ.டி. விங் செய்கிறது.

அதிலும் இது கழகத்தின் பவள விழா நிறைவு ஆண்டு. நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து – கடந்த காலத்தை எடைபோட்டு, நாம் அடுத்து நடைபோட வேண்டிய பாதையைத் தீர்மானிக்கக் கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்பு.

**‘கட்டை விரலைக் கேட்டால் பட்டை உரியும்!**

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, உரிமைகள் மறுக்கப்பட்டு – வாய்ப்புகள் பறிக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட தமிழினம் மேலெழுந்து வந்த வரலாறுதான் நம்முடைய தி.மு.க. வரலாறு! இந்த இனம் இழிவில் இருந்து மீள வேண்டும் என்றுதான், சுயமரியாதையையும் – பகுத்தறிவுச் சிந்தனையையும் ஊட்டினார் தந்தை பெரியார். அரசியல் அதிகாரத்தை நோக்கி நகர்த்தினார் பேரறிஞர் அண்ணா.

“கட்டை விரலைக் கேட்டால் பட்டை உரியும்” என்று முழங்கிச் சட்டங்களும் திட்டங்களும் வகுத்துச் சமூகத்தின் மேடு பள்ளங்களைச் சமன்படுத்த உழைத்தார் நம்முடைய தலைவர் கலைஞர். தலைவர் கலைஞரின் உழைப்புதான் கழகத்தைப் பாதுகாத்தது. அவர் விட்டுச் சென்றுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு – கடமை நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப்பட்டிருக்கிறது! அந்தக் கடமையை, ‘நமக்கு நாமே’ நினைவூட்டிக் கொள்வதற்கான வாய்ப்புதான் இதுபோன்ற நிகழ்ச்சிகள்!

குறிப்பாக, இந்தாண்டு “உலகெங்கும் திராவிடம்” என்று, திராவிட இயக்கக் கொள்கைகளால் – சட்டத்திட்டங்களால் உலகத்தின் பல நாடுகளிலும் தமிழர்கள் சிறப்பான நிலையில் இருப்பதை எடுத்துக்காட்டும் வகையில் நிறைய வீடியோக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள்.



இதற்காக ஐ.டி. விங்கையும் – அயலக அணியையும் பாராட்டுகிறேன்!

இன்றைக்கு நம்முடைய இளைஞர்கள் உலகெங்கும் பல்வேறு நிறுவனங்களில் முக்கியப் பொறுப்புகளில் இருக்கிறார்கள். இதற்குப் பின்னால், நம்முடைய சமூகநீதிக் கொள்கை, தலைவர் கலைஞர் ஆட்சிக்காலத்தில் பொது நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது, முதல் தலைமுறைப் பட்டதாரிகளின் தொழிற்கல்விக்கான கட்டணத்தை அரசு ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்தது உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் இருக்கிறது.

**தலைமுறைகளின் முன்னேற்றமே, நாம் காண விரும்பும் வளர்ச்சி!**

நாம் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டமும் ஒரு படிக்கட்டு. ஒவ்வொரு படிக்கட்டிலும் ஒவ்வொருவர் ஏறும்போதும், ஒரு தலைமுறையே முன்னேறுகிறது! இந்த முன்னேற்றம்தான் நாம் காண விரும்பும் வளர்ச்சி!

இவ்வாறு வளர்ச்சியடைந்த பலரின் வீடியோக்களையும் பதிவு செய்திருக்கிறார்கள். வீடியோக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள் என்று சொல்வதைவிட, அவர்களின் அனுபவத்தை மற்றவர்களுக்கு வழிகாட்டும், ’கைடாக’ மாற்றியிருக்கிறார்கள்.

அவர்கள் அனைவருமே சாமானியர்கள். என்னைப் போன்று – உங்களைப் போன்று எளிய பின்னணியில் இருந்து வந்தவர்கள். கற்ற கல்வியால் – பெற்ற வாய்ப்புகளால் – உழைத்த உழைப்பால் இன்றைக்கு உயரங்களில் இருக்கிறார்கள். இந்த உயரத்துக்கான பாதைதான், சமூகநீதி!

**பயனுள்ள கருத்தாக்கங்களை உருவாக்கிடுவீர்!**

திராவிட இயக்கத்தின் சமூகநீதிப் போராட்ட வரலாற்றை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைத் திட்டங்களைத் திராவிட மாதமான செப்டம்பர் மாதத்தில் மட்டும் சொல்லி முடித்துவிட முடியாது. எனவே, இது போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடக்க வேண்டும். ஆக்கப்பூர்வமான கருத்துகள் விவாதிக்கப்பட வேண்டும். பயனுள்ள கருத்தாக்கங்களை நீங்கள் உருவாக்க வேண்டும்.

இனப் பகைவர்களும் – அவர்களுக்குத் துணைபோகும் வீணர்களும் உண்டாக்கும் திசைதிருப்பல்களுக்கு நீங்கள் நேரம் கொடுக்கக் கூடாது. சமூக ஊடகங்களில் என்ன ’டிஸ்கஸ்’ செய்கிறீர்கள் என்று நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இங்கு பேசப்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது.

**மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு!**

பொய்களையும் – அவதூறுகளையும் – பாதி உண்மைகளை மட்டும் சொல்லிச் சிலர் குழப்புவார்கள். அதற்கு நீங்கள் யாரும் ஏமாந்துவிடக் கூடாது. எந்தச் செய்தி வந்தாலும் ‘எமோஷனலாக’ மட்டும் அணுகாதீர்கள்; அந்தச் செய்தி பற்றிய உண்மைத்தன்மையைச் சரிபார்த்துக் கொள்ளுங்கள். அந்தப் பொய்யைப் பரப்புகிறவர்களுக்கு இல்லாத இரண்டு, நம்மிடம் இருக்கிறது. அதுதான் தந்தை பெரியார் சொன்ன மானமும் அறிவும், மனிதருக்கு அழகு! எனவே, கவனமுடன் கடமையை ஆற்றுங்கள்! என்றும் வெற்றி நமதே!

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

## திராவிட மாதக் கொண்டாட்டம்!

# தகவல் தொழில்நுட்ப அணியின் பாராட்டுக்குரிய பணி!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**“செப்டம்பர் மாதம் முழுவதையும் #திராவிட_மாதம் எனக் கொண்டாடிய கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் பணிகள் பாராட்டுக்குரியது!**

**கழக வரலாறு – கொள்கை – அடைய வேண்டிய இலட்சியங்கள் ஆகியவற்றையும் திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் இளைய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கும் சிறப்பான முன்னெடுப்புகளால், அணிக்குப் பெருமை சேர்க்கும் அருமைத் தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும், மாநிலம் முதல் கிளைக் கழகங்கள் வரை அவருக்குத் துணை நிற்கும் அனைத்து நிர்வாகிகளுக்கும் வாழ்த்துகள்!**

**சாதனைகள் செய்யப்படுவது முறியடிக்கப்படுவதற்கே! நீங்கள் செய்யும் சாதனைகளை நீங்களே முறியடிக்கும் வகையில் உங்களின் அடுத்தடுத்த பணிகள் அமைய வாழ்த்துகிறேன்!’’**

இசை நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுக்கு வலைதளங்கள் மூலம்

# கூடுதல் விலையில் டிக்கெட் விற்பனை செய்யப்படுவதை கட்டுப்படுத்துவீர்!

## ஒன்றிய நிதி அமைச்சருக்கு – தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

சென்னை, அக். 1-

மும்பையில் நடைபெற விருக்கும் இசை நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகளை மறுவிற்பனை செய்வதாக வந்த புகார்கள் தேசிய அளவில் கவனம் பெற்ற நிலையில், இதுபோன்ற கருப்புச் சந்தைகளின் நடவடிக்கைகளால் உண்மையான நுகர்வோர்கள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளாகிப் பாதிப்படைகின்றனர். எனவே இதுபோன்ற செயல்களை கட்டுப்படுத்தி பொதுமக்களின் நம்பிக்கைகளை மீட்டெடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு ஒன்றிய நிதியமைச்சருக்கு கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

இந்தியாவில் டிக்கெட் விற்பனை மோசடிகள் குறித்த பரவலான செய்திகளைத் தொடர்ந்து, அதிகத் தேவையுள்ள பொருட்களின்மீதான அளவற்ற லாபம், மறுவிற்பனை குறித்து முழுமையான மற்றும் அவசர விசாரணைத் தேவை என்றும். மேலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளின் டிக்கெட்டுகள் மற்றும் ஆடம்பரப் பொருட்களை அங்கீகரிக்கப்படாத வலைதளங்களின் மூலம் மறுவிற்பனை செய்வதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மும்பையில் நடைபெற விருக்கும் இசை நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகளை மறுவிற்பனை செய்வது தொடர்பான புகார்கள் எழுந்ததையடுத்து, இந்தப் பிரச்னை தேசிய அளவில் கவனத்தைப் பெற்றது. முதலில் இந் நிகழ்ச்சிகளின் டிக்கெட்டுகளின் விலையாக ரூ.2,500 முதல் ரூ 25,000 வரை நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது, பிறகு அதிகாரப்பூர்வமற்ற தளங்கள் மூலம் ரூ 3,00,000 வரை மறுவிற்பனை செய்யப்பட்டதாக



கூறப்படுகிறது. அதனடிப்படையில் டிக்கெட் தளத்தின் தலைமை நிர்வாக அதிகாரியை மும்பை காவல்துறையின் பொருளாதார குற்றப் பிரிவின் (EOW) அதிகாரப்பூர்வ விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

மேலும் கடந்த 2023ஆம் ஆண்டின் ஐசிசி ஆண்கள் கிரிக்கெட் உலகக் கோப்பை மற்றும் இந்தியன் பிரீமியர் லீக் (ஐபிஎல்) ஆகியவற்றின்போதும், இதேபோன்ற குற்றச்சாட்டுகள் எழுந்தது, அப்போதும் அதிகாரப்பூர்வ தளங்களில் டிக்கெட்டுகள் விரைவாக விற்றுத் தீர்ந்து, பின்னர் மறுவிற்பனையாளர் வலைதளங்களில் உயர்த்தப்பட்ட விலையில் விற்பனைத் தொடங்கியது. டிக்கெட் விற்பனைத் தளங்களுக்கும், கருப்புச் சந்தையைச் சார்ந்தவர்களுக்கும் இடையே உள்ள தொடர்புகளைத்தான் இது காட்டுகிறது. இதுபோன்ற நிகழ்வுகள் தொடர்ந்தால், அது நுகர்வோர் நம்பிக்கையினைக் கெடுத்துவிடும் என்று கவலை மேலோங்குகிறது. மேலும் இது *Anti Scalping* சட்டங்களுக்கு எதிரானதாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில், டிக்கெட் வழங்கும் துறையை மட்டும் விசாரிக்காமல், இதேபோன்ற சவால்களை எதிர்கொள்ளும் மற்ற துறைகளையும் சேர்த்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக ஆடம்பர ஆடை மற்றும் ஆடைத் துறைகளிலும் அங்கீகரிக்கப்படாத மறுவிற்பனைமூலம் நுகர்வோருக்கு அதிக அளவில் நஷ்டம் ஏற்படுகின்றது.

இதுபோன்ற கருப்புச் சந்தைகளின் விலை ஏற்றத்தால், உண்மையான வாடிக்கையாளர்கள் ஏமாற்றம் அடைவதோடு, சட்டவிரோதச் சந்தை முறையை ஊக்குவித்து பொருளாதாரத்தையும் சேர்த்து பாதிக்கிறது. என்று தயாநிதி மாறன் குறிப்பிட்டுள்ளார். மேலும் “நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கவும், அதிக தேவையுள்ள பொருட்களின் விற்பனையில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் வலுவான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் அவசியம்.” என்றும் தெரிவித்துள்ளார்.

சிலரின் அதீத லாப எண்ணம் மற்றும் டிக்கெட் பதுக்கல் போன்ற செயல்களால் நுகர்வோரின் நம்பிக்கை சிதைந்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த இன்னும் கடுமையான சட்டங்கள் தேவை என்றும், தனிக் குழுக்கள் அமைத்து கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுத்து வருகிறது. எனவே இப்பிரச்னைக்கு தீர்வு காணவும், பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், இதுபோன்ற சட்டவிரோதச் செய்லகளை தடுக்க ஒன்றிய அரசு விரைவான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. தெரிவித்துள்ளார்.